International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# போளூர் வட்டச் சைவப் பழங்கோயில்களின் வழிபாடுகள்

**ரா. சக்திவேல்** (32126DFR01107)
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் க. தமிழ்ச்செல்வன்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த), வேலூர் - 2

**ஆய்வுச் சுருக்கம்**

போளூர் வட்ட மக்களின் உண்மையான வழிபாட்டு நிலை, பழம்பெரும் பண்பாட்டுச் சின்னங்களானச் சைவப்பழங்கோயில்களை உயிரெனப் பேணியமை, அருளொளி பரப்பிவரும் இறைவனை வழிபாட்டின் வழி அடையும் முறையை உணர்ந்தமை, வழிபாட்டின் வரையறை, சட்டங்கள், உரிமைகள், விதிகள், வழிபாட்டுக்கூறுகள், வழிபாட்டின் சிறப்புகள், வழிபாட்டு முறைகள்போன்றன இடம் பெற்றுள்ளன.

**முதன்மைச் சொற்கள்:** போளூர் வட்டம், சைவப்பழங்கோயில்கள், வழிபாடு, மரபுகள், சைவ சமயம், வழிபாட்டுரிமை, களஆய்வு, சமயப் பண்பாடு, பாரம்பரியப் பாதுகாப்பு.

**முன்னுரை**

வழிபாடுகள், பண்பாட்டு அடிப்படையில் போளூர் வட்டச் சைவப்பழங் கோயில்களில் எவ்வாறு நடைபெற்றன, மாமன்னர்கள் முதல் மக்கள் வரை எவ்வாறெல்லாம் திருப்பணிகள் செய்தனர். சைவக்கோயில்களின் வழிபாட்டு நிலைகள், மக்கள் தந்த ஆதரவுகள், வழிபாடு தோன்றி, வளர்ந்த முறைகள், சட்டமுறைகள், நெறிகள் போன்றவையும் ஆராயப்பட்டுள்ளன. இவ்விழா வினாலும் வழி பாட்டினாலும் மக்கள் மறை முகமாகவும் நேரடியாகவும் பெற்ற பலன்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு நோக்கம்** (Objectives of the Study)

**இவ்வாய்வின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:**

* போளூர் வட்டத்தில் அமைந்துள்ள சைவப்பழங்கோயில்களில் இன்று நிலவி வரும் வழிபாட்டு மரபுகளைப் பதிவு செய்து ஆய்வு செய்தல்.
* சைவக்கோயில்களின் வழிபாட்டு முறைகள், விழாக்கள், பூசை நெறிகள் மற்றும் அவற்றின் சமய–பண்பாட்டு அடித்தளங்களை விளக்குதல்.
* கோயில் வழிபாடுகள் உள்ளூர் மக்களின் சமூக ஒற்றுமை, பண்பாட்டு அடையாளம் மற்றும் ஆன்மிக வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்தல்.
* வழிபாட்டுரிமை, வழிபாட்டுச் சட்டம், ஆகம மரபுகள் மற்றும் கோயில் நிர்வாக

நடைமுறைகளுக்கிடையிலான தொடர்பை விளக்குதல்.

* போளூர் வட்டச் சைவக்கோயில்களின் வழிபாட்டு மரபுகளை தமிழகத்தின் பிற சைவத் தலங்களின் வழிபாட்டு மரபுகளுடன் ஒப்பிடுவதற்கான அடிப்படை ஆய்வுத் தரவை உருவாக்குதல்.

**ஆய்வுமுறை** (Methodology)

இவ்வாய்வு தரவியல் (Qualitative Research) அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்ட விளக்கவியல் மற்றும் களஆய்வு (Descriptive and Field-based Research) ஆகும்.

**ஆய்வில் பின்வரும் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன:**

**களஆய்வு** (Field Survey): போளூர் வட்டத்திலுள்ள சைவப்பழங்கோயில்கள் நேரில் பார்வையிடப்பட்டன.

**உற்றுநோக்கல்** (Observation Method): தினசரி பூஜை, திருவிழாக்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் நேரடியாகக் கவனிக்கப்பட்டன.

**நேர்காணல் முறை** (Interview Method): கோயில் அர்ச்சகர்கள், அறங்காவலர்கள், பக்தர்கள் மற்றும் உள்ளூர் அறிஞர் களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

**ஆவண ஆய்வு** (Documentary Method): தேவாரம், திருமந்திரம், தொல்காப்பியம், திருக்குறள், கோயில் வரலாற்று நூல்கள், கல்வெட்டு ஆய்வுகள் மற்றும் தொல்லியல் துறை வெளியீடுகள் பயன்படுத்தப்பட்டன.

**ஒப்பாய்வு முறை** (Comparative Method): போளூர் வட்டக் கோயில்களின் வழிபாட்டு மரபுகள் பிற சைவத் தலங்களின் வழிபாட்டு மரபுகளுடன் ஒப்பிட்டு விளக்கப்பட்டன.

**முன்னைய ஆய்வுகள்** (Review of Literature)

தமிழகக் கோயில் வழிபாடு, சைவ சமய மரபுகள் மற்றும் கோயில் பண்பாடு குறித்து பல அறிஞர்கள் ஆய்வுகள் மேற்கொண்டு உள்ளனர்.

**மா. இராசமாணிக்கனார்** தமிழக வரலாறு, சமயம் மற்றும் கோயில் பண்பாடு குறித்த தனது ஆய்வுகளில் கோயில்கள் தமிழர் சமூக வாழ்வின் மையங்களாக விளங்கியதை எடுத்துரைக்கிறார்.

**இரா. நாகசாமி** தமிழகக் கோயில்களின் கட்டடக்கலை, கல்வெட்டுகள் மற்றும் வழிபாட்டு மரபுகள் குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு சோழர்–பாண்டியர் காலக் கோயில்களின் சமூகப் பங்களிப்பை விளக்குகிறார்.

**குடவாயில் பாலசுப்பிரமணியன்** தமிழகத் திருக்கோயில்களின் தலவரலாறு, கட்டடக் கலை மற்றும் வழிபாட்டு மரபுகளை விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

**கா. சிவத்தம்பி** தமிழ் சமூகம், சமயம் மற்றும் பண்பாட்டு அமைப்பில் கோயில் களின் சமூகப் பங்கை பண்பாட்டியல் நோக்கில் விளக்குகிறார்.

Archaeological Survey of India மற்றும் Tamil Nadu State Department of Archaeology வெளியிட்டுள்ள ஆய்வறிக்கைகள் தமிழகப் பழங்கோயில்களின் வரலாற்று வளர்ச்சியை ஆவணப்படுத்துகின்றன.

இவ்வாய்வுகள் பொதுவாக தமிழகச் சைவத் திருக்கோயில்களின் வரலாறு, கட்டடக்கலை மற்றும் கல்வெட்டுகளை மையமாகக் கொண்டுள்ளன. ஆனால் போளூர் வட்டத்தில் அமைந்துள்ள பல்வேறு சைவப்பழங்கோயில் களின் வழிபாட்டு மரபுகளை ஒருங்கிணைத்து, களஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் ஆராய்ந்த ஆய்வுகள் மிகக் குறைவாக உள்ளன. அந்த ஆய்விடைவெளியை நிரப்புவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் புதுமை** (Research Gap / Novelty)

**இவ்வாய்வின் புதுமைகள் பின்வருமாறு:**

போளூர் வட்டத்தில் உள்ள பல சைவப்பழங் கோயில்களின் வழிபாட்டு மரபுகள் ஒரே ஆய்வில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

களஆய்வு, நேர்காணல் மற்றும் நூலாய்வு ஆகிய மூன்று ஆய்வுமுறைகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

வழிபாட்டை சமயச் செயலாக மட்டுமன்றி சமூக ஒற்றுமை, பண்பாட்டு நினைவகம் மற்றும் மரபு பாதுகாப்பு ஆகிய கோணங்களில் அணுகுகிறது.

கோயில் வழிபாட்டுரிமை மற்றும் அரசியலமைப்புச் சட்டக் கூறுகள் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

தற்போதைய வழிபாட்டு நடைமுறைகள், தலவரலாறு மற்றும் மக்கள் மரபுகள்

இணைத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**ஆய்வின் வரம்புகள் (Limitations)**

இவ்வாய்வு போளூர் வட்டத்தில் அமைந்துள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சைவப்பழங்கோயில் களை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளது.

வைணவம், சமணம், பௌத்தம் போன்ற பிற சமயத் தலங்கள் ஆய்வில் சேர்க்கப் படவில்லை.

கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் அனைத்தும் முழுமையாக ஆய்வு செய்யப் படவில்லை.

ஆகம நூல்களின் விரிவான ஒப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை.

பக்தர்களின் சமூக–பொருளாதாரப் பின்னணி தொடர்பான புள்ளிவிவர ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

ஆய்வு பெரும்பாலும் தரவியல் அணுகு முறையை (Qualitative) அடிப்படையாகக் கொண்டது; அளவியல் (Quantitative) பகுப்பாய்வு இடம்பெறவில்லை.

**வழிபாடு**

இறைவனின் திருவருளைப் பெற வழிபாட்டினை நெஞ்சாரச்செய்தல் வேண்டு மென்பது பொதுவானதொரு விதியாகும். இவ்வழிபாடு ஆன்மநல ஈடேற்றத்துக்காகத் தெய்வத்தை நினைத்துப் பக்தியுடன் புரிந்திடும் வணக்கம் எனலாம். அழுக்குத் துணிகளைச் சலவையால் வெள்ளை ஆக்குவதைப் போல, ஆணவம் முதலிய அழுக்குகள் படிந்த மனதைக் கடவுள் வழிபாடு தூய்மை யாக்குகிறது. போளூர் வட்ட மக்கள் தெய்வத்தைத் தூய மனதுடன் நினைத்து வழிபடுவதாகிய வாழ்வு, தெய்வத்தின் நலன்களில் தோய்ந்து, தெய்வத்துடன் கூடி இன்புறுதலுக்கேயாகும். அன்பு, வாய்மை, தூய்மை, தியாகம், தொண்டு, முதலிய நற்பண்புகளின் வளர்ச்சியினூடே மிகவுயர்ந்த வழிபாட்டை அடையும் என்பதை உணர்ந்திருந்தனர். மனம், மொழி, மெய் ஆகிய மூன்றிலும் தூய்மையுடன்கூடிய வழிபாடு அமைய, மக்கள் வழிபாட்டு வரையறையை உணர வேண்டுவது அடிப்படை. அந்நிலையில்தான் தெய்வத்தின் பேராற்றலையும் பேரருளையும் உணர்ந்து சிந்திக்கவும் அருளனுபவம் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

அறியாமையிலிருந்து,மேலான ஞானஎல்லைக்கு அழைத்துச்செல்வது வழிபாடு. பயணம் செய்பவர்கள் பாசத்தைப் பாதையில் ஊன்றிச் சேரவேண்டிய எல்லையை நோக்கி முன்னேற வேண்டும். கடந்த தூரம் பெருகிக் கடக்க வேண்டிய தூரம் குறுகிக் கடைசியில் எல்லையினை அடைதல் களிப்பூட்டும், அதுபோல அறியாமை தேய்ந்து அல்லல் நீங்கி அழியா இன்பம் பெருக நம் பேரின்ப வைப்பாக இருக்கிற இறைவனின் இணையடிகளைச் சார்ந்து இன்புறுவதும் வழிபடுவதும் உன்னதமான நிலைக்கு வழிவகுக்கும்.

இறைவனிடம் முழுமையானதொரு அடைக் கலமாகும் வகையில் வழிபாடு அமைதல் வேண்டும் என்பதை இராமகிருட்டிண பரமஹம்சர் தம் சீடர்களுக்கு, “தாயே, ஆனந்தமயீ! உன் சொரூபத்தை எனக்குக் காட்டி அருள்வாயாக. நீ காட்சிகள் கொடுத்தேயாகவேண்டும். தீனதயா பரியே! அகிலாண்ட நாயகியே, நான் உன் படைப்புக்குப் புறம்பானவன் அல்லன்; நெறியான வாழ்வை நான் அறிந்திலேன்; என்னிடத்துப் பக்தியில்லை, எனக்கு நீ காட்சி அளித்தருள்வாயாக”[1] என வேண்டினார்.

இறைவனைச் சிந்தனையில் கொண்டு, காதலாகி, கண்ணீர் சிந்திக் கடைத் தேறக் கசிந்துருக வேண்டுமென்பது இதனால் புலனாகிறது. இத்தகைய வழிபாட்டுப் பழக்கத்தைப் போளூர் வட்ட மக்கள் மேற்கொள்வதற்குக் காரணம், அவர்கள் இறையிடத்தே கொண்ட நம்பிக்கை, இறைவனை அன்புடன் வணங்கி வழிபட்டால் இறைவன் ஆதரவு கிட்டும், விருப்பத்தை விண்ணப்பித்தால் அவர் அதனை முடித்து வைப்பார், தம் எண்ணம் ஈடேற அவரருள் துணைகள் செய்யும் எனப் போளூர் வட்ட மக்கள் முழுமையாக நம்பிக்கைகள் கொண்டிருந்தார்கள்.

மனிதனுக்கு இறைவனிடத்தே நம்பிக்கை என்று தோன்றிற்றோ, அன்றே அவ்விறைவனை வழிபடுவதற்கான நியதியும் தோன்றியிருத்தல் வேண்டும். இறைவனை வழிபடுவதற்குத் தேவையாகச் சில உள. மனதில் முழுநம்பிக்கை, உண்மையன்பு,

தூய்மை, படைக்கும் பொருள் ஆகியவை யாகும். தனிவழிபாடு, கூட்டுவழிபாடு என்னும் இருவகை வழிபாடுகளைப் பழங்காலம் தொட்டு போளூர் வட்ட மக்கள் நிகழ்த்தி வருகின்றனர். கல்வியால் பணிவு வரும். அப்பணிவு வழிபடுதலுக்கான மன நிலையைத் தோற்றுவிக்கும். அதனாலேயே வள்ளுவர்,

**“கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**

**நற்றாள் தொழாஅர் எனின்”**[2]

எனும் குறள்வழி, கற்றதன் பயன், இறைவனை அடிதொழல் என்று குறிப் பிடுகிறார். கற்றவரைக் காட்டிலும் கல்லாதவரே இறைவழிபாட்டில் பக்தியுடன் நடந்து கொள்கின்றனர் என்பதை உணர்தல் வேண்டும். வழிபாடு என்பது உயிர் குறைகள் நீங்கி நிறை நலம் பெற்று, ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த அன்பில் விளைந்த இன்ப ஆரமுதை நுகர்ந்து இன்புறுதலையே நோக்கமாகக் கொண்டது. ஓர் எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு நம்மை அழைத்துச் சென்று சேர்க்கும் பாதையினை உலகியல் வழி. கருங்குழி எல்லையிலிருந்து ஆராஇன்னமுத எல்லைக்கு அழைத்துச் செல்வது வழிபாடு; இருளடர்ந்த சூழலிலிருந்து மீட்டு நம்மை ஒளிநிறைந்த எல்லைக்கு வழிபாடு அழைத்துச்செல்கிறது.

## வழிபாட்டின் நிலை

தொடக்கக்காலத்தில் போளூர் வட்ட மக்கள் அச்ச உணர்வின் காரணமாக இறைவனை வழிபடலாயினர். அவர்கள் ஒவ்வொரு செயலின் ஆரம்பத்திலும் இறைவனை வழிபட்டனர். இவ்வழிபாடு ஆராதனை, வணக்கம், கோட்பாடு, வழக்கம் எனும் பொருள்களில் வழங்குகிறது. வழிபாட்டு முறைகள் கோயிலுக்குக் கோயில் வேறு படுகிறது. பன்னெடுங்காலத்திற்கு முன் வழி பாடுகள், விழாக்கள் நிகழ்ந்ததைக் குறளில் வள்ளுவர் கூறுகையில், ‘மழை பெய்யாமல் பொய்க்குமானால் தேவர்கட்கு இவ்வுலகில் மக்களால் செய்யப்படும் விழாவும், பூசைகளும் நடைபெறாது’ என்கிறார்.

வாழ்வென்னுந் துன்பத்திற்கிடந்து உழன்றுக் கொண்டு இறைவனை நினைக்க இடமின்றி வருந்தும் மக்களுக்கு இடையிடையே தம் ஐயனைப் போற்றிய எண்ணத்தை எழுப்பும் பொருட்டாகவே போளூர் வட்டச் சைவப்பழங் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மனவுறுதி உடையவர்களுக்குச் சைவத்திருக் கோயில் வழிபாடு இன்றியமையாதது. மனவுறுதி, அன்பு, தூயஅறிவு நிறைந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலான மேலோரே கோயில்கள் தோறும் சென்று வழிபட்டனர்.

அவரவர் மன ஒருமைப்பாட்டுக்கு எவை உதவிகள் புரிகின்றனவோ அம்முறையில் வழிபாட்டினை மேற்கொள்ளவேண்டும். உள்ளத்தில் கடவுள் நெறி ஒன்றைத்தான் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். தினந்தோறும் இறைவழிபாடு செய்தல் வேண்டும். இறைவழிபாடு மனஅமைதியைத் தரும். சிலர் கடவுளுக்கு உருவம் படைத்து வழிபடுகின்றனர. சிலர் உருவ வழிபாட்டை எதிர்க்கிறார்கள்.

பெரும்பாலோர் கோயில் (அ) பெரிய கட்டிடம் அமைத்து வழிபடுகிறார்கள். எவ்வாறாயினும், “வாழ்க்கையின் முதலும் முடிவும் கடவுளைச் சார்ந்தவை என்று தெரிந்து, அவ்வழியில் சிந்தையைச் செலுத்தலே வழிபாடு”[3] என்பர் மு.வ. அவரவர் மனஒருமைப்பாட்டுக்கு எது உதவிகள் புரிகிறது என நம்புகிறார்களோ அதைப் போற்றலாம். ஒவ்வொரு நாளும் கடவுள் வழிபாடு செய்தல் நன்மைபயக்கும், உள்ளத்தை உயர்த்தும். அமைதி நல்கும். கடவுள் எங்கும் என்றும் உள்ள பெருஞ் சக்தியாய் எல்லாப் பொருளுமாய் எல்லா உயிருமாய் விளங்குதலை எண்ண வேண்டும்.

“நெஞ்சம்உமக் கேஇட மாகவைத்தேன்

நினையாதொரு போதும் இருந்தறியேன்”[4] என்று திருநாவுக்கரசரும்,

“நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே

மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே”[5] என்று தாயுமானவரும்.

“அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே

அன்பெனும் குடில் புகும் அரசே”[6] என இராமலிங்கரும், பாடிய பாடல்களை உணர்ந்து வழிபடவேண்டும் என்பர் மு.வ. மேலும், முத்துக்குமார சாமித்தம்பிரான் அருளிய திருவுந்தியாரில்,

"உள்ளும் புறமும் நினைப்பறின் நின்னுள்ளே

மொள்ளா அமுதாம் என்(று) உந்தீபற

முளையாது பந்தம் என்(று) உந்தீபற"[7] என்று அக, புற வழிபாடும் ஒழிந்த அகண்ட வழிபாட்டில் உலவாத இன்பம் உண்டு. அத்தகைய வழிபாடு ஆற்றுவோர்க்கு இருள்சேர் இருவினையும் சேரா என்கிறார். ஒரு பறவை இரு சிறகுகளைக்கொண்டு பறப்பதைப்போல், இறை வழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன. நீரால் இறைவனை முழுவதுமாக நீராட்டி, மேலும், சந்தனம், நெய், பால், அமிர்தம் என எண்ணற்றவற்றால் இறைவனை நீராட்டு எனும் குடமுழுக்குச் செய்து இறைவனைத் தூய்மைப் படுத்தி, பின், வண்ணமும் மணமும் கொண்ட மலர் வகைகளைத் தூவியும் அலங்கரித்தும் செய்யப்படும் வழிபாடு உன்னதமானது என்பதைப் போளூர் வட்ட மக்கள் வழி மெய்ப்பிக்கிறது.

இத்தகைய வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் அருளையும், இறைத் தொண்டி னையும், மனநிறைவையும் அடைகிறார்கள். சிறு கோயில்கள் முதல் பெருங்கோயில்கள் வரை கடவுளுக்கு நீரும், பூவும் பயன்படுகின்றன. ஏனெனில, சில காரணங்களால் பல பொருட்கள் இல்லாமல் இருக்கும். ஆனால், எப்போதும் வழிபாட்டிற்குத் துணை நிற்பது பூவும் நீரும்.

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு

அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்"[8] என்பது திருமந்திரம். எங்கும் நிறைந்த இறைவனை எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினாலும் நீரினாலும் வழிபடவேண்டும். வழிபாட்டிற்கு அன்பும் ஆசாரமும் இரண்டு கண்கள். வழிபாட்டு உணர்வு மன அடிப்படையாகத் தோன்றியது. இயற்கையின் செயலை மனிதன் உணர இயலாதநிலையில், அதனை வழிபட்டு அமைதிப்படுத்த முயன்றபோது வழிபாடுகள் தோன்றின. வழிபாடு செய்தால் மனமாசுகள் கழிகின்றன. இறைவன் பேரருளைப் பெறுகிறோம். வழிபாட்டினை எப்போதும் செய்தல் வேண்டும். பாசப்பற்று விடுத்தற் பொருட்டு இறைவனைப் பற்றும் முறையே கடவுள் வழிபாடு எனப்படும்.

### வழிபாட்டுச் சட்டம்

சட்டங்கள், நாட்டின் இறையாண்மைக்காகவும், ஒற்றுமைக்காகவும் பொது நியதிக்காகவும் தோன்றின. சட்டங்கள் வரும்முன் அச்ச உணர்வும், இதுதகாது எனும் உணர்ச்சியும் பயமும் ஒழுக்கமும் மேலோங்கிக் காணப் பட்டன. அதனால், சட்டங்கள் தேவையில் லாமல் போனது. நாளடைவில் இவை குறைய குறைய சட்டங்கள் தோன்றலாயின. சட்டங்கள் மக்களை முறைப்படுத்தவும், ஒழுங்குப்படுத்தவும் உதவின. வழிபாட்டினை எவரொருவர் மீறுகிறாரோ, அவரையே இச்சட்டம் பாதிக்கும். அதனடிப்படையில் அவரவர்க்குச் சுதந்திரமும் கட்டுப்பாடுமுண்டு. ஒருவனுடைய உளச்சான்றின் ஆணைக் குகந்த முறையில் இறைவனை வழிபடுவதே வழிபாட்டுச் சுதந்திரம் என்பது அமெரிக்கத் தலைமை நீதிமன்றத் தீர்ப்பு. ஆனால், பொது அமைதிக்கும், நலனுக்கும், ஒழுக்கத்திற்கும் ஊறு விளைவிக்காமல் இருக்க வேண்டும்.

நற்றமிழ் வழிபாடு என்பது அரசமைப்பு உரிமை. அதாவது, அரசமைப்பின் சட்டம் 29 -ஆம் பிரிவு வழிபாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அந்த அடிப்படைச் சுதந்திரத்தைத் தடுப்பதற்கோ, பறிப்பதற்கோ மற்றவர்களுக்கு எவ்வகை உரிமையும் இல்லை. இச்சட்டங்கள் தனிப்பட்ட மனிதனின் பாதிப்பாக இருந்தாலும், கூட்டாக இருப்பினும் அவர்களைக் கட்டுப்படுத்தும். இச்சட்டம் தோன்றியதன் காரணம், மனித சுதந்திரத்தைக் காப்பது மட்டுமின்றி வழிபடும் தெய்வம் (ம) சமூகநலனுக்காகவும் ஆகும்.

### வழிபாட்டுரிமை விதிகள்

இந்திய அரசியலமைப்பின் 'முன்னுரை' இந்திய மக்களாகிய நாம், அதன் குடி மக்களுக்குச் சமுதாய, பொருளாதார, அரசியல் நீதியையும், கருத்து, பேச்சு நம்பிக்கையையும், பற்றுறுதி(ம) வழிபாட்டுச் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவதற்கும், இந்த அரசமைப்பை இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொண்டோம் என்கிறது. எனவே, வழிபாட்டுச் சுதந்திரம், அரசமைப்புத்தரும் காப்பு உரிமைக்கும் அரசமைப்புத்தரும் குறிக்கோளுக்கும் வழிவகை செய்கிறது.

### வழிபடும் உரிமை

ஒருவனுடைய மனச்சாட்சியின் கட்டளைக்கு

உகந்த முறையில் இறைவனை வழிபடுவதே வழிபாட்டுரிமையாகும். ஒருவனது விருப்பத் திற்கு ஏற்ப வழிபாடு செய்யும் உரிமையை இறைவனே அவனுக்குத் தந்துள்ளான். ஒருவன் தனது உளத்தொடர்பை இறைவ னோடு எந்த வகையில் விரும்பி அமைத்துக் கொள் கின்றானோ, அந்த உள்ளார்ந்த முழுமையான உரிமையே உளச்சான்றுக்குச் சுதந்திரம். இவ்வுரிமை எல்லோருக்கும் பொது, ஏற்றத்தாழ் வற்றது; மரபு வழிக் கட்டுப்படுத்துவது அல்ல. மொழிவழி வல்லாண்மைக்கு ஆட்படுவதுமல்ல. எச்சமயச் சார்பு இன்றியும் இவ்வுரிமையைப் பெறலாம்.

### வழிபாட்டுக்கூறுகள்

வழிபாடு என்பது ஆன்மநல ஈடேற்றத்துக் காகத் தெய்வத்தை நினைந்து பக்தியுடன் புரிந்திடும் வணக்கம். அழுக்குத் துணிகளைச் சவர்க்காரத்தால் வெள்ளையாக்குவதுப் போல, ஆணவம்; முதலிய அழுக்குகள் படிந்த மனதைக் கடவுள் வழி பாட்டால் தூய்மை ஆக்குகிறோம் என உணர்தல் வேண்டும். இதனால், தனிப்பட்ட நிலையிலே ஒருமுகப்பட்ட தியானம் சித்திக்கும். மண்ணுலகத்திலுள்ளோர் உய்க்கவே அமைந்துள்ள வழிபாடு குறித்து, போளூர் வட்ட அருளாளர்கள் புலப்படுத்திய மெய்யுரை களை உரைக்கிறது. எல்லா இடங்களிலும் அவர் பரம்பொருளை நோக்கியே வேண்டுகிறார். இவர் உருவத்தைக் கடவுளாக வழிபடவில்லை. கடவுளையே உருவத்திலும் அவ்வுருவத்தின் வழியாகவும் வழிபட்டார். பழங்காலத்தில் போளூர் வட்டச் சைவப்பழங் கோயில்களில் வழிபாடு செய்வதற்கென்றே ‘திரு விசைப்பா’ எனும் வழிபாட்டு நூல் எழுந்தது. பூ+செய் = பூசெய் - பூசை. பூ இட்டு தமிழில் வழிபாடுகள் செய்யப் பட்டதைப் ‘பூசை’ எனும் சொல்லே காட்டுகிறது. தமிழ் வழிபாடாகியப் பூசையை, “பூவை நிலை”[9] “பூக்கோள் நிலை”[10]என்கிறது தொல்காப்பியம். ஆண்டவன் அருளைப்பெற உள்ள உருக்கமும், நீரும், பூவும் போதும். இவ்வழிபாட்டால் இறைவனது அருளைப் பெறலாம்

### போளூர் - கடலாடி - கரைகண்டேசுவரர் கோயில்

செங்கம் - போளூர்ச் சாலையில் செங்கத்தி லிருந்தும் போளூரில் இருந்தும் 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கடலில் நிற்பது கப்பல். அதுபோல் பெரிய நான்கு ஏரிகளுக்கு இடையே கப்பல் போல இவ்வூர் நிற்பதால் கடலாடி எனப்பட்டது. பரம்பரைக் குருக்களே அறங்காவலராக உள்ளார். இக்கோயிலில் உற்சவர் திருமேனிகள் பூசையற்ற நிலையில் வன்னீசர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

### போளூர் - கரைப்பூண்டி - திருக்கண்டேசுவரர் கோயில்

இக்கோயில் போளூருக்குக் கிழக்கில் 5கி.மீ. தொலைவிலுள்ள கரைப் பூண்டி எனும் ஊரில், தெற்குநோக்கிய வாயிலும் கிழக்கு நோக்கிய கருவறையும் கொண்டு உள்ளது. இக்கோயிலில் நாள்தோறும் ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. காணும் பொங்கல், சிவராத்திரி, திருவாதிரை ஆகிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. இக்கோயிலுக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது. இக்கோயிலுக்குக் குதிரை, மயில், இடபம் ஆகிய வாகனங்கள் உள்ளன.

### போளூர் - பூண்டி - கரைகண்டேசுவரர் கோயில்

இக்கோயில் போளூர் வட்டத்தில், கலசப் பாக்கம் தொடர்வண்டிப்பாதையி னின்றும் 5கி.மீ.தொலைவில், திருவண்ணாமலைக்கு வடக்கே சேயாற்றின் வடகரையில் அமைந்துள்ள, பூண்டி கிராமத்தின் வடகிழக்கில் தெற்கு நோக்கிய வாயிலும் கிழக்கு நோக்கிய கருவறையும் கொண்டு 5 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. கருவறை மீது 3 நிலை விமானம் அமைந்து உள்ளது. குருக்கள் ஒருகாலப்பூசை செய்கிறார். சிவராத்திரி, தைப்பூசம் ஆகிய நாள்களில் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. வள்ளலார் இக்கோயிலுக்குப் பலமுறை வருகைத் தந்துள்ளார். பூண்டி மகான் போன்ற தவச்சீலர்கள் இங்கு வழிபட்டுள்ளனர்.

### போளூர் வட்டம் – களம்பூர் - காசிவிசுவநாதர்

போளூர்க்கு வடக்கே 18 கி.மீ. தொலைவில் இக்கோயில் உள்ளது. இங்கு மூலவர் காசிவிசுவநாதர் காட்சியளிக்கிறார். இங்கு ஒரு காலப் பூசை, மாசிப் பஞ்சமி திதியில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

### போளூர் வட்டம் - ஆத்துவாம்பாடி - தருமலிங்கேசுவரர்

போளூர்க்கு நேர்வடக்கே 10 கி.மீ. தொலைவில் இக்கோயில் உள்ளது. இங்குச் சுயம்புலிங்க மூர்த்தியாகத் தருமலிங்கேசுவரர் உள்ளார். பஞ்ச பாண்டவர் வனவாசம் செய்த காலத்தில் தருமர் இத்தலத்தில் சிவலிங்கம் நிறுவி வழிபட்டுக் காட்சி கண்டதால் இறைவர்க்குத் தருமலிங்கேசுவரர் என்று பெயர் வந்தது. இக்கோயிலில் ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. பங்குனி உத்திரத்தில் உற்சவம் நடைபெறுகிறது. உற்சவமூர்த்தி வீதி உலா வருவது வழக்கம்.

### போளூர் வட்டம் - மேல்வில்வராயநல்லூர்

போளூர்க்குத் தென்மேற்கே 12 கிலோ மீட்டரில் வில்வாரணி என்னும் ஊர் உள்ளது. இங்கு ஆவுடையநாதீசுவரர் வீற்றிருக்கின்றார். இங்கு இருகாலப் பூசையும் பங்குனி உத்திரத்தில் பிரமோற்சவமும் நடைபெறுகின்றன.

### போளூர் வட்டம் - தென்மகாதேவமங்கலம்

போளூர்க்குத் தென்மேற்கே 16கி.மீ. சேயாற்றின் வடகரையில் இக் கோயில் உள்ளது. இங்கு மூலவராகக் கரைகண்டேசுவரர் உள்ளார். இங்கு ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரையில் உற்சவம் நடை பெறுகிறது.

### போளூர் வட்டம் - கரைப்பூண்டி

இக்கோயில் போளூர்க்குக் கிழக்கில் 5கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு மூலவராகத் திருக்கண்டேசுவரர் லிங்க வடிவில் காட்சியளிக்கிறார். இக்கோயிலில் நாள்தோறும் ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. மேலும், காணும் பொங்கல், சிவராத்திரி, திருவாதிரை ஆகிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

### போளூர் வட்டம் - பெலாசூர் - கனகசபாபதீசுவரர் கோயில்

போளூர்க்குத் தென்கிழக்கில் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு நடம்புரியும் தில்லையின் நினைவாக இக்கோயில் இங்கு நிறுவப்பட்டுள்ளது. “இங்கு மூலவராகக் கனகசபாபதீசுவரர் சிவலிங்க வடிவில் உள்ளார். நாள் தோறும் இருவேளைப் பூசை நடைபெறுகிறது. மேலும், நவராத்திரி சிறந்த முறையில் கொண்டாடப்படுகிறது.”[11] காணும்பொங்கல், திருவாதிரை நாள்களில் வீதியுலாக்கள் நடைபெறுகின்றன.

### போளூர் வட்டம் - போளூர் சோமநாதீசுவரர் கோயில்

வேலூர்-திருவண்ணாமலை நெடுஞ்சாலை யில் அமைந்துள்ளது. இங்குள்ள, “இறைவன் தன்னை வழிபட்டவர்களுக்கு அவர் வேண்டும் பொருளை வழங்கி வந்ததால், இவ்வூர் பொருளூர் எனப்பட்டது”[12]. இங்கு மூலவராகச் சோமநாதீசுவரர் உள்ளார். இக்கோயிலில் இருகாலப்பூசை, சிவராத்திரி, ஆரூத்ரா திருவூடல், நவராத்திரி ஆகிய திருவிழாக்கள் நடை பெறுகின்றன.

### போளூர், தென்மகாதேவமங்கலம் - கரைக்கண்டேசுவரர் கோயில்

இக்கோயில் செங்கம்-போளூர்ச் சாலையில், போளூர் வட்டத்தில் தென்மகா தேவி மங்கலத்தின் நடுவில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. சப்தகரை கண்டேசுவரர் தலங்களில் நான்காவதாக உள்ள தலம். குருக்கள் ஒரு காலப்பூசை செய்கின்றனர். கார்த்திகை விளக்கீடு, “மார்கழி, திருவாதிரை, வெள்ளிக்கிழமை, கிருத்திகை, அன்னாபி டேகம், சிவராத்திரி ஆகிய விழாக்களும் நடைபெறுகின்றன.”[13] மார்கழியில் பெரியவிழா நடைபெறுகிறது. அன்று சோமாசுகந்தர் இடபவாகனத்தில் அருகிலுள்ள மகாதேவ மலையைச் சுற்றி வலமாக வருவார். அம்மலையைச் சுற்றிலும் 32 கி.மீ. வரையில் இடையிடையே உள்ள ஊர்களில் மண்டகப்படி நடைபெறும்.

### அறிவன

போளூர் வட்டச் சைவகோயில் வழிபாடுகள், மக்கள் சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் நிகழ்வுகளாக நடைபெறுகின்றன. வழிபாட்டு நெறிகள், சிறப்புகள் இவற்றால் மக்களும் கோயில்களும் பெற்ற நன்மைகள் (ம) வழிபாடுகள் பெருகியதன் விளைவாக உருவான நல்சட்டங்கள் போன்றனவும் ஆராயப்பட்டன. போளூர் வட்டத்தில் வழிபாடு கள் வேறுபட்டமை, சிறப்பு போன்றனவும் இதனால் கோயில்கள் இன்றளவும் செழிப்பு டன் இருப்பது போன்றனவும் வெளிப்படுத்தப் படுகின்றன. இயற்கையாகவே இவ்வழி பாட்டால் மனிதர்களுக்கிடையே இருந்த வேற்றுமைகள் அகன்று ஒற்றுமைகள் நிலவியதும் போளூர் வட்ட மக்களின்

ஒருமைப்பாடு மேலோங்கியதும், பூசல் நீங்கி, அமைதியான வாழ்வுக்கு வழிவகுத்த தும் அறியப்பட்டன. போளூர் வட்டத்தில் மேலோங்கிக் காணப்படும் சைவப் பழங்கோயில்களில் நடைபெற்று வருகின்ற வழிபாட்டு முறைகள் பற்றி ஆராயப்பட்டன. சைவப்பழங் கோயில்களின் வழிபாட்டுநிலை, தன்மைகள் போன்றன சுட்டப்பட்டன.

**எதிர்கால ஆய்வுத் திசைகள்** (Future Scope)

* போளூர் வட்டச் சைவக்கோயில்களின் கல்வெட்டு ஆய்வு.
* போளூர் வட்டக் கோயில்களின் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை ஆய்வு.
* சைவக்கோயில்களின் திருவிழாக்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைகள்.
* கோயில் பொருளாதாரம் மற்றும் ஊரக வளர்ச்சி.
* பெண்களின் பங்கு மற்றும் வழிபாட்டு மரபுகள்.
* டிஜிட்டல் ஆவணமாக்கல் மற்றும் மரபுரிமைப் பாதுகாப்பு.
* போளூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டச் சைவத் தலங்களின் ஒப்பாய்வு.

**முடிவுரை**

போளூர் வட்டத்தில் அமைந்துள்ள சைவப்பழங்கோயில்கள் சமய வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல், அப்பகுதி மக்களின் பண்பாடு, மரபு, சமூக ஒற்றுமை மற்றும் ஆன்மிக வாழ்வின் அடையாளங்க ளாகவும் விளங்குகின்றன என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. கோயில் களில் நடைபெறும் நாளாந்த பூஜைகள், ஆண்டு திருவிழாக்கள், வழிபாட்டு நெறிகள் மற்றும் மக்களின் பக்தி மரபுகள் ஆகியவை தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது கள ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வழிபாடு என்பது இறைநம்பிக்கை யின் வெளிப்பாடு மட்டுமல்லாமல், சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் பண்பாட்டு அமைப்பாகவும் செயல்படுகிறது என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது. வழிபாட்டுச் சுதந்திரம், கோயில் நிர்வாகம், மக்கள் பங்களிப்பு மற்றும் மரபு சார்ந்த நடை முறைகள் ஆகியவை சைவச் சமயப்பாரம் பரியத்தின் தொடர்ச்சிக்குத் துணை நிற்கின்றன என்பதும் தெளிவாகிறது.

களஆய்வு, நேர்காணல் மற்றும் ஆவண ஆய்வு ஆகியவற்றின் வழியாகச் சேகரிக்கப் பட்ட தரவுகள், போளூர் வட்டச் சைவப் பழங்கோயில்களின் வழிபாட்டு மரபுகளை ஆவணப்படுத்துவதோடு, அவற்றின் சமய, சமூக மற்றும் பண்பாட்டுப் பங்களிப்புகளை யும் வெளிக்கொணர்கின்றன. இவ்வாய்வு, உள்ளூர் கோயில் வழிபாட்டு மரபுகளைப் பாதுகாக்கவும், எதிர்கால ஆய்வுகளுக்குத் தேவையான அடிப்படைத் தரவுகளை வழங்கவும் உதவும் குறிப்பிடத்தக்க ஆய்வாக அமைகிறது. எனவே, போளூர் வட்டச் சைவப் பழங்கோயில்களின் வரலாறு, கல்வெட்டுகள், கட்டடக்கலை, வழிபாட்டு மரபுகள் மற்றும் சமூகப் பங்களிப்புகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் தொடராய்வுகள், தமிழகச் சைவ மரபின் வரலாற்றை மேலும் செழுமைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை

**அடிக்குறிப்புகள்**

1. செ.வைத்தியலிங்கம், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, ப - 2
2. பேரா. அ.மாணிக்கம், திருக்குறள் தெளிவுரை, ப - 3, குறள் - 2.
3. மு.வரதராசனார், நல்வாழ்வு, ப - 19.
4. திருநாவுக்கரசு, தேவாரம், பா - 2.
5. தாயுமானவர், பராபரக்கண்ணி, பா - 155.
6. இராமலிங்க அடிகளார், பா - 3269.
7. முத்துக்குமாரசாமித் தம்பிரான், திருவுந்தியார் தெளிவுரை, ப-23
8. திருமந்திரம், பா - 1828.
9. ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, ப - 37.
10. மேற்படி, ப -85.
11. பேட்டி எடுப்பவர்:ஆய்வாளர் ரா.சக்திவேல், பேட்டி தருபவர்:திருநாவுக்கரசு, போளூர் - இராமநாதீசுவரர் கோயில் நாள் : 05.06.2026.
12. பேட்டி:ஆய்வாளர் ரா.சக்திவேல், பேட்டி தருபவர்: பசுபதி, போளூர் அகத்தீசுவரர் கோயில், நாள்: 06.6.2026.
13. பேட்டி எடுப்பவர்:ஆய்வாளர் ரா.சக்திவேல், பேட்டி தருபவர்: வைத்தியலிங்கம், போளூர்- கனகசபாபதீசுவரர் கோயில், நாள்: 08.06.2026